# Chapter
# இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

---

## I. சரியான விடையைத் தெரிவு செய்க.

Question 1.
எந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன்வைத்தார்?
அ) உட்ரோ வில்சன்
ஆ) ட்ரூமென்
இ) தியோடர் ரூஸ்வேல்ட்
ஈ) பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்
**விடை:**
ஆ) ட்ரூமென்

Question 2.
சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?
அ) செப்டம்பர் 1959
ஆ) செப்டம்பர் 1949
இ) செப்டம்பர் 1954
ஈ) செப்டம்பர் 1944
**விடை:**
ஆ) செப்டம்பர் 1949

Question 3.
அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் ..................... ஆகும்.
அ) சீட்டோ
ஆ) நேட்டோ
இ) சென்டோ
ஈ) வார்சா ஒப்பந்தம்
**விடை:**
ஆ) நேட்டோ

Question 4.
பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969இல்

தலைவராகப் பதவியேற்றவர் யார்?
அ) ஹபீஸ் அல் – ஆஸாத்
ஆ) யாசர் அராபத்
இ) நாசர்
ஈ) சதாம் உசேன்
**விடை:**
ஆ) யாசர் அராபத்

Question 5.
வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?
அ) 1975
ஆ) 1976
இ) 1973
ஈ) 1974
**விடை:**
ஆ) 1976

Question 6.
எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
அ) 1979
ஆ) 1989
இ) 1990
ஈ) 1991
**விடை:**
ஈ) 1991

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

Question 1.
நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ……………… ஆவார்.
**விடை:**
டாக்டர் சன்-யாட்-சென்

Question 2.
1918இல் …………. பல்கலைகழகத்தில் மார்க்ஸியக் கோட்பாட்டை அறியும் அமைவு நிறுவப்பட்டது.
**விடை:**
பீகிங்

Question 3.
டாக்டர் சன் யாட் சென்னின் மறைவுக்குப் பின்னர் கோமிங்டாங்

கட்சியின் தலைவராக இருந்தவர் ……………. ஆவார்.
**விடை:**
சியாங்-கை-ஷேக்

Question 4.
அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பிய அரபுநாடுகளுக்கு திறந்தே இருந்த ஒப்பந்தம் …………….. ஆகும்.
**விடை:**
சென்டோ (அ) பாக்தாத் ஒப்பந்தம்

Question 5.
துருக்கிய அரபுப்பேரரசை ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்த ஒப்பந்தம் ……………
**விடை:**
வெர்செய்ல்ஸ்

Question 6.
ஜெர்மனி நேட்டோவில் …………….ஆம் ஆண்டு இணைந்தது.
**விடை:**
1955

Question 7.
ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் …………….. நகரில் அமைந்துள்ளது.
**விடை:**
ஸ்ட்ராஸ்பர்க்

Question 8.
ஐரோப்பிய இணைவை உறுதி செய்ய 7 பிப்ரவரி 1992இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் ………………. ஆகும்.
**விடை:**
மாஸ்டிரிக்ட்

## III. சரியான வாக்கியம் வாக்கியங்களைத் தெரிவு செய்க.

-Question 1.
i) கற்றறிந்த சிறுபான்மையினரின் தாக்கத்தில் சீனாவின் (1898) இளம் பேரரசர் துவக்கிய சீர்த்திருத்தங்கள் நூறு நாள் சீர்திருத்தம் என்று அறியப்படுகிறது.
ii) கோமிங்டாங் கட்சி தொழிலாளர்களையும் விவசாயிகளையும்

பிரதிநிதித்துவப்படுத்தியது.
iii) மஞ்சூரியா மீதும் ஷாண்டுங் மீதும் ஜப்பான் பொருளாதாரக் கட்டுப்பாட்டை விதிக்க யுவான் ஷி-கே உடன்பட்டதால் தேசியவாதிகள் பார்வையில் அவர் செல்வாக்கு இழந்தார்.
iv) சோவியத் நாடு இருபது ஆண்டு காலத்திற்கும் மேலாக சீன மக்கள் குடியரசை அங்கீகரிக்க மறுத்தது.

அ) i) மற்றும் ii) சரி
ஆ) ii) மற்றும் iii) சரி
இ) i) மற்றும் iii) சரி
ஈ) i) மற்றும் iv) சரி
**விடை:**
இ) i) மற்றும் iii) மட்டும் சரி

**Question** 2.
i) கிழக்கு ஐரோப்பாவில் 1948இல் சோவியத்நாடு நிறுவிய இடதுசாரி அரசுகளை சோவியத் இராணுவம் விடுதலை செய்தது.
ii) வடக்கு அட்லாண்டிக் பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யவே நேட்டோ உருவாக்கப்பட்டது.
iii) சிட்டோவின் உறுப்பு நாடுகள் அப்பகுதியில் மக்களாட்சி பரவுவதைத் தடுக்கும் நோக்கோடு செயல்பட்டார்கள்.
iv) ஜப்பானுக்கெதிராக பிரிட்டன் அணுகுண்டைப் பயன்படுத்தியதின் மூலம் அது ரஷ்யாவுக்கு தன்னுடைய அழிக்கும் திறனை எடுத்துக்காட்ட விரும்பியது.

அ) ii), iii) மற்றும் iv) சரி
ஆ) i) மற்றும் ii) சரி
இ) iii) மற்றும் iv) சரி
ஈ) i), ii) மற்றும் iii) சரி
**விடை:**
ஆ) i) மற்றும் ii) மட்டும் சரி

**Question** 3.
கூற்று : அமெரிக்காவின் மார்ஷல் திட்டம் போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மறு நிர்மானத்திற்காக முன்வைக்கப்பட்டது.
காரணம் : அமெரிக்க நாடு அத்திட்டத்தின் மூலம் மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டுவர நினைத்தது.

அ) கூற்றும் காரணமும் இரண்டுமே சரி. ஆனால் காரணம், கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
ஆ) கூற்றும் காரணமும் தவறானவை

இ) கூற்றும் காரணமும் சரி. காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
**விடை:**
இ கூற்றும் காரணமும் சரி. காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது.

## IV. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர் சன் யாட் சென் | அ) தெற்கு வியட்நாம் |
| 2. | சிங்மென் ரீ | ஆ) கோமிங்டாங் |
| 3. | அன்வர் சாதத் | இ) கொரியா |
| 4. | ஹோ சி மின் | ஈ) எகிப்து |
| 5. | நிகோ டின் டியம் | உ) வடக்கு வியட்நாம் |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர் சன் யாட் சென் | **ஆ) கோமிங்டாங்** |
| 2. | சிங்மென் ரீ | **இ) கொரியா** |
| 3. | அன்வர் சாதத் | **ஈ) எகிப்து** |
| 4. | ஹோ சி மின் | **உ) வடக்கு வியட்நாம்** |
| 5. | நிகோ டின் டியம் | **அ) தெற்கு வியட்நாம்** |

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.

Question 1.
சீனாவில் 1911ஆம் ஆண்டில் நடந்த புரட்சிக்கு ஏதேனும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக.
**விடை:**
1911ஆம் ஆண்டு சீனப்புரட்சி:

- மஞ்சு வம்சத்தின் சிதைவு 1908ஆம் ஆண்டு பேரரசின் பாதுகாவலராயிருந்த பேராசிரியர் தாவோகரின் மரணத்தோடு துவங்கியது.
- புதிய பேரரசர் இரண்டு வயதே நிரம்பியவர் என்ற நிலையில் மாகாண ஆளுநர்கள் சுதந்திரமாகச் செயல்படலாயினர்.

- உள்ளூர் இராணுவக் கிளர்ச்சி ஏற்பட்டு அதன் பாதிப்பு பல மட்டங்களில் பரவியது.

Question 2.
மாவோவின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.
**விடை:**

- 1933ஆம் ஆண்டு வாக்கில் சீன பொதுவுடைமை கட்சியின் மீதான முழுக் கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது.
- ஒரு நீண்ட பயணத்தை முன்னெடுத்து 1,00,000 பொதுவுடைமை இராணுவத்தினர் 1934-இல் கிளம்பினர்.
- அப்பயணம் ஒரு சகாப்தமாக மாறியது. இவ்வாறு கிளம்பிய 1,00,000 பேரில் வெறும் 20,000 பேர் மட்டும் 1935இன் பிற்பகுதியில் 6,000 மைல்களைக் கடந்து வடக்கு ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர்.
- அவர்களோடு மற்ற பொதுவுடைமைவாதப் படைகளும் சேர்ந்து கொண்டன.

Question 3.
பாக்தாத் உடன்படிக்கை பற்றி அறிந்ததை எழுதுக.
**விடை:**
சென்டோ (CENTO) அல்லது பாக்தாத் ஒப்பந்தம்:

- துருக்கி, ஈராக், பிரிட்டன், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் 1955இல் ஏற்படுத்திய ஒப்பந்தமே பாக்தாத் ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது.
- 1958இல் இணைந்ததோடு, இவ்வொப்பந்தம் மத்திய உடன்படிக்கை அமைப்பு என்று அறியப்பட்டது.
- இவ்வொப்பந்தம் 1979இல் கலைக்கப்பட்டது.

Question 4.
மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
**விடை:**
மார்ஷல் திட்டம் :

- மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்கினுள் வைத்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடு மார்ஷல் திட்டத்தை உருவாக்கியது.
- இத்திட்டம் இரண்டாம் உலகப்போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதற்காக அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்தது.

- அமெரிக்க ஐக்கிய நாட்டின் செயலர், ஜார்ஜ், சி. மார்ஷல் ஐரோப்பாவின் சுய முன்னேற்ற முயற்சிக்குத் தம் நாடு பண உதவி செய்யுமென்று அறிவித்தார்.
- நிதியுதவி வழங்கும் மார்ஷலின் திட்டமானது 1951-இல் முடிவுக்கு வந்தது.

Question 5.
மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
**விடை:**

- அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் கூடிய முதலாளித்துவ நாடுகள் உலக அரசியலில் முதலாம் உலக நாடுகள் என்றும் சோவியத் நாட்டின் தலைமையில் கூடிய பொதுவுடைமை நாடுகள் இரண்டாம் உலக நாடுகள் என்றும் அழைக்கப்பட்டன.
- இவ்விரு பிரிவிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என்று அழைக்கப்பட்டன.

Question 6.
கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?
**விடை:**

- சோவியத்நாடு கியூபாவில் அணுசக்தியோடு இணைக்கப்பட்ட ஏவுகணைகளை இரகசியமாக நிறுவப்போவதாய் கென்னடி தலைமையிலான அமெரிக்க அரசிற்கு உளவுத்துறை தகவல் கொடுத்தது.
- இறுதியாக சோவியத் நாட்டின் குடியரசுத் தலைவர் குருசேவ் ஏவுகணைகளைத் திரும்பப்பெற உறுதியளித்ததால் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

## VI. விரிவான விடை தருக.

Question 1.
சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடுக.
**விடை:**
கோமிங்டாங்கும் ஷியாங்கே-ஷேக்கும்

- சன்யாட் சென் இறந்தபின் கோமிங்டாங்கின் தலைவராக ஷியாங்கே-ஷேக்கும்.
- பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களாக சூ-யென்-லாயும் மாசே துங்கும் விளங்கினர்.

- பொதுவுடைமைவாதத்தின் தீவிர விமர்சகரான ஷியாங் தனது கட்சிக்குள்ளிருந்த பொதுவுடைமைவாதிகளை முக்கிய பொறுப்புகளிலிருந்து விடுவித்தார்.
- வெற்றிகரமாக அவர் 1928ஆம் ஆண்டு பீகிங் நகரைக் கைப்பற்றினார்.
- மீண்டும் சீனாவில் ஒரு நடுவண் அரசு உருவானது.

விவசாயிகளை வழி நடத்திய மாவோ:

- கோமிங்டாங்கின் கட்டுப்பாடு நகரங்களின் மீது கடுமையாக இருந்ததை மாவோ (மா சே துங்) உணர்ந்தார்.
அதனால் அவர் விவசாயிகளை ஒருங்கிணைக்க முயற்சி செய்தார்.
- மாவோவின் தலைமையில் சில நூறு கம்யூனிஸ்டுகள் காடுகள் சூழ்ந்த மலைப்பகுதிகளில் பதுங்கியிருந்தனர்.
- கோமிங்டாங்கால் அக்காட்டு மலைப்பகுதிகளில் நுழைய முடியாத அதே வேளையில் மாவோவின் படை பெருகிக் கொண்டே சென்றது.

1934இல் நீண்ட பயணம்:

- 1933ஆம் ஆண்டு வாக்கில் சீன பொதுவுடைமை கட்சியின் மீதான முழுக்கட்டுப்பாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது.
- 1934இல் 1,00,000 பொதுவுடைமை இராணுவத்தினர் நீண்ட பயணத்தை மேற்கொண்டனர்.
- அப்பயணம் ஒரு சகாப்தமாக மாறியது.
- இவ்வாறு கிளம்பிய 1,00,000 பேரில் வெறும் 20,000 பேர் மட்டும் 1935இன் பிற்பகுதியில் 6,000 மைல்களை கடந்து வடக்கு ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர்.
- அவர்களோடு மற்ற பொதுவுடைமைவாதப் படைகளும் சேர்ந்து கொண்டன. 1937ஆம் ஆண்டில் ஏறக்குறைய ஒரு கோடி மக்களின் தலைவராக மாவோ அங்கீகரிக்கப்பட்டார்.

**Question** 2.
ஐரேப்பியக்குழு எவ்வாறு ஐரோப்பிய இணைவானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக.
**விடை:**
ஐரோப்பிய குழுமம்:

- ஐரோப்பியர்களுக்கிடையே மூண்ட போர்களைத் தவிர்க்கவும் அதிலும் குறிப்பாக பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்டுக் கொண்டிருந்த பகைமையை ஒடுக்கவும்

- ஒருங்கிணைந்த ஐரோப்பாவைக் கொண்ட சோவியத் நாட்டின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும்.
- அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளுக்கும் சோவியத் நாட்டின் படைகளுக்கும் சமமாக ஒரு படை பலத்தை நிறுவவும்.
- கண்டங்களிடையே அல்லது கண்டங்களில் பொருளாதார மற்றும் இராணுவ வளங்களையும் திறன்களையும் முழுதாகப் பயன்படுத்தவும் முடியும் என்று கருதப்பட்டது.

ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம்:

- ஐரோப்பியப் பாதுகாப்பு சமூகமும் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகமும் துவங்கப்பட்டன.
- ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகத்தைச் சேர்ந்த ஆறு நாடுகள் கூடி ரோம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.
- ஐரோப்பியப் பொருளாதார, சமூகம் பிரெஸெல்ஸ் நகரைத் தலைமையகமாகக் கொண்டு ஏற்படுத்தியது.

ஐரோப்பியப் பொருளாதார சமூகம்:

- இச்சமூகம் பண்டங்கள், சேவைகள், முதலீடு, தொழிலாளர்கள் போன்றவற்றின் நகர்வை எல்லைகள் கொண்டு நிறுத்துவதை மாற்றியது.
- சந்தைப்போட்டியைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றபோது கொள்கைகளையும் தனியார் ஒப்பந்தங்களையும் புறக்கணித்தது.
- ஐரோப்பிய பொதுச்சந்தை என்பது ஒரு வெற்றிகரமான முயற்சியாகும்.

ஒற்றை ஐரோப்பியச் சட்டம்:

- ஒற்றை ஐரோப்பியச் சட்டம் 1 ஜுலை 1987இல் நடைமுறைக்கு வந்தது.
- ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் எல்லைகளை விரிவாக்கி அதற்கு சட்டவடிவம் கொடுத்தது.
- ஒரு சட்ட நிறைவேற்றத்திற்கு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை என நிலை நிறுத்தப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம்:

- 1992 பிப்ரவரி 7இல் கையெழுத்திடப்பட்ட மாஸ்டிரிகட் (நெதர்லாந்து) ஒப்பந்தம், ஐரோப்பிய ஒன்றியத்தை ஏற்படுத்தியது.

- ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 உறுப்பு நாடுகள் உள்ளன. பிரெஸெல்ஸ் (பெல்ஜியம்) நகரைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.